எம்.சி.ஓ.பி.220/2015 ம.சா.1. முனியப்பன் த/பெ பலராமன்

**09.01.2023 குறுக்கு விசாரணை**

1. விபத்து சம்மந்தமாக காவல் நிலையத்தில் நான் நேரடியாக புகார் கொடுக்கவில்லை. என்னுடைய உரிமையாளர் புகார் கொடுத்தார். நான் விபத்து சமயத்தில் ஓட்டி சென்ற T.N.21 L 7977 என்ற தபேரா வாகனத்தின் உரிமையாளர் சரஸ்வதி ஆவார். சரஸ்வதியின் மகன் பெயர் வனராஜ்.

2. வனராஜ் தான் விபத்து குறித்து காவல் நிலையத்தில் புகார் கொடுத்தார். விபத்து நடந்த போது வனராஜ் என்னுடன் இல்லை. அதனால் வனராஜிக்கு விபத்து பற்றி நேரடியாக தெரியாது என்றால் சரிதான். மற்றவர்கள் விபத்து பற்றி சொல்லிதான் வனராஜ்புகார் கொடுத்தார்.

3. T.N.36 J 4800 என்ற பதிவெண் கொண்ட லாரி அதிவேகமாகவும், கவனக்குறைவாகவும், ஆரன் அடிக்காமலும் என் வாகனத்திற்கு முன் புறம் வந்து என் வாகனத்தின் மீது இடித்து கட்டுப்பாடு இழந்து மோதியதால் என்னுடைய வாகனம் புளிய மரத்தின் மீது மோதியதுஎன்றால் சரிதான்.

4. விபத்து சம்மந்தமாக பதிவு செய்யப்பட்ட வழக்கில் போலிசார் தயாரித்த மாதிரி வரைபடம் இந்த மனுவில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் அதுபற்றி எனக்குத் தெரியாது.

5. விபத்து நேரத்தில் நான் ஓட்டி சென்ற டவேரா வாகனத்தை ஓட்டுவதற்கான ஓட்டுனர் உரிமம் என்னிடம் இருந்ததா என்றால் இருந்தது. அந்த ஓட்டுனர் உரிமத்தின் நகலை நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேன். விபத்து நேரத்தில் என்னிடம் இருந்த ஓட்டுனர் உரிமம் நான் செய்யாரில் பெற்ற உரிமம் ஆகும். ஓட்டுனர் உரிமம் எண்.2260 எந்த வருடம் உரிமம் பெறப்பட்டது என்று நினைவில்லை. 2015 லிருந்து 2018 வரையில் எனக்கு ஓட்டுனர் உரிமம் இருந்தது. நான் சொல்வது போல் என்னிடம் ஓட்டுனர் உரிமம் இல்லை என்றும் அவ்வாறு இருந்திருந்தால் மனுதாக்கல் செய்யும் சமயத்தில் ஓட்டுனர் உரிமத்தின் நகலும் தாக்கல் செய்யப்பட்டிருக்கும் என்றால் சரியல்ல.

6. விபத்தின்போது எனக்கு வலது கையில் காயம் ஏற்பட்டது. மேல்மருவத்தூர் ஆதிபராசக்தி மருத்துவமனையில் விபத்து ஏற்பட்டவுடன் முதல் உதவி பெற்றேன். அதன்பிறகு சென்னை எஸ்.ஆர்.எம் மருத்துவமனையில் சிகிச்சைக்கு சேர்ந்தேன். 26.07.2015 முதல் 03.08.2015 வரையில் 7 நாட்கள் எஸ்.ஆர்.எம் மருத்துவமனையில் உள் நோயாளியாக சிகிச்சை பெற்றேன் என்றால் சரிதான். 03.08.2015 அன்று நான் டிஸ்சார்ஜ் ஆகி அதன்பின்னர் 06.08.2015 முதல் 13.08.2015 வரை 9 நாட்கள் ராமசந்திரா மருத்துவமனையில் உள்நோயாளியாக சிகிச்சை பெற்றேன் என்றால் சரிதான். எஸ்.ஆர்.எம் மருத்துவமனையில் 7 நாட்களும் ராமசந்திரா மருத்துவமனையில் 9 நாட்களும் ஆக மொத்தம் 16 நாட்கள் தான் நான் உள் நோயாளியாக மருத்துவமனையில் சிகிச்சைபெற்றேன் என்றால் சரிதான். எஸ்.ஆர்.எம் மருத்துவமனையில் 08.08.2015 ராமசந்திரா மருத்துவமனையில் எனக்கு ஒரு முறை அறுவை சிகிச்சை செய்யப்பட்டது என்றால் சரிதான்.

7. எனக்கு ஒரு முறைதான் அறுவை சிகிச்சை செய்யப்பட்டது என்றும், ஆனால் 7 முறை அறுவை சிகிச்சை செய்யப்பட்டது என்று சொல்கிறேன் என்று சொல்வது தவறு என்றும், அதற்குண்டான மருத்துவ ஆவணங்கள் எதுவும் தாக்கல் செய்யாமல் காப்பீடு நிறுவனத்தில் பணம் பறிக்க வேண்டுமென்ற நோக்கத்துடன் பொய்யாக சொல்லி உள்ளேன் என்றால் சரியல்ல. அதற்குரிய ஆவணங்களை தாக்கல் செய்துள்ளேன்.

8. நான் ராமசந்திரா மருத்துவமனையில் இருந்து 13.08.2015 அன்று டிஸ்சார்ஜ் ஆன பிறகு ஒருவருடம் கழித்து ம.சா.ஆ.10 ஆவணமான 10.05.2016 தேதியிட்ட ஆவணத்தை மருத்துவமனையிலிருந்து வழக்கிற்காக பெற்றேன் என்றால் சரிதான். என் கை சரி செய்வதற்காக அந்த ஆவணத்தை வாங்கினேன்.

9. ம.சா.ஆ.10 ஆவணம் எதிர்காலத்தில் என்கையை சரி செய்வதற்கு எவ்வளவு செலவாகும் என்பது குறித்துதான் வழங்கப்பட்டுள்ளதுஎன்றால் சரிதான். ம.சா.ஆ.10 ஆவணம் ரூ.12,00,000/- என்று மொத்தமாக சொல்லப்பட்டுள்ளது என்றும் அந்த செலவுகள் என்ன என்ன காரணத்திற்காக எந்த எந்த தலைப்பில் பெறப்படும் என்பது குறித்த விவரங்கள் அந்த ஆவணத்தில் இல்லை என்றால் சரிதான்.

10. ம.சா.ஆ.10 மருத்துவர் மோகன் குமார் என்பவரால் வழங்கப்பட்ட ஆவணம் அல்ல என்றும் வழக்கிற்காக பொய்யாக தாயாரிக்கப்பட்ட ஆவணம் என்றால் சரியல்ல. ம.சா.ஆ.10 ஆவணத்தை நிருபிப்பதற்காக மருத்துவர் மோகன்குமாரை விசாரணை செய்ய முடியுமா என்றால் அவர் வந்தால் விசாரிக்க தயாராக உள்ளேன்.

11. என்னுடைய வயது சான்று மற்றும் வருமான சான்று எதுவும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். ஓட்டுனர் உரிமம் இல்லாத நான் ஓட்டுனர் தொழில் மூலமாக மாதம் ரூ.15,000/ வருமானம் பெறுவதாக வழக்கிற்காக பொய்யாக சொல்லி உள்ளேன்என்றால் சரியல்ல.

12. விபத்து நடந்தவுடன் கொடுக்கப்பட்ட புகாரில் என் தவறு எதுவும் இல்லை என்று சொல்லப்பட்டுள்ளது என்றும் ஆனால் உண்மையில் லாரி ஓட்டுனர் மீது எந்த தவறும்இல்லை என்றும் என்னுடைய அஜாக்கிரதையால் தான் இந்த விபத்து ஏற்பட்டதுஎன்றால் சரியல்ல. விபத்து சம்மந்தமாக தாக்கல் செய்யப்பட்ட குற்றவியல் வழக்கு என்னவானது என்று எனக்குத் தெரியாது. அந்த குற்ற வழக்கின் இறுதி அறிக்கை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்படவில்லை என்றால் சரிதான்.

13. விபத்து என்னுடைய தவறால் ஏற்பட்டது என்பதால் அது சம்மந்தமாக நட்டயீடு எதுவும் நான் கோர முடியாது என்றும் செலவுத் தொகையுடன் இந்தமனு தள்ளுபடி செய்ய வேண்டுமென்றால் சரியல்ல.